*கவனிக்க.- 2018.11.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2098 - 2018 නොවැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2018.11.16

*2098 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 208 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

207- B81468-353 (2018/11)

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

தென் மாகாண சபையில் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள வெலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர்/ மேலதிக காணி ஆணையாளர் (உள் மாகாண) துசாரி பீ சூரிய ஆரச்சி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின்கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1984,யூலை மாதம் 30 ஆந்திகதி வழங்கப்பட்டுள்ள மாற/பிர/7297 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் கீழ் உரிமையாளரான போரம்ப கனங்கே எனும் முகவரியில் வசிக்கும் கலஹே பாண்டிகோரலகே எக்மன் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LDO 381 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.08.28 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமை யாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் 2018.12.02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

தென் மாகாணத்தின், மாத்தறை நிருவாக மாவட்டத்தின், வெலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் வெலிகாம கோரளை யிலுள்ள போரம்ப கனங்கே வடக்கு கிராம அலுவலர் பிரிவின் போரம்ப கனங்கே எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபர் என்பவரின் பொருப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்கள புத்தகத்தில் இலக்கம் 14, ஆரம்ப கிராமப்பட இலக்கம் 559 இல் வரைபட இலக்கம் 739 எனக் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் விஸ்தீரணம் சுமார் 03றூட் 26 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு : உடுமுல்லே கெலே

வடக்கு : ஆரம்ப கிராமப் படம் 559 இல் 777 மற்றும் 779 துண்டு;
கிழக்கு : ஆரம்ப கிராமப் படம் 559 இல் 779, 780, 788;
தெற்கு : ஆரம்ப கிராமப் படம் 559 இல் 788, 790;
மேற்கு : ஆரம்ப கிராமப் படம் 559 இல் 790, 84, 777.

துசாரி பீ. சூரிய ஆரச்சி,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணியாளர்,
வெலிபிடிய.

11-592

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/55702.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : பிஎல்சி/3031687.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இரத்தினபுரி மாவட்டம், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிலிமலே தெற்கு 163 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ரத்துருகல கிராமத்தில் அமைந்துள்ளதும் அரச நில அளவையாளர் டி. என். பியரத்ன அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2010/110 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கங்கள் A மற்றும் B எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0383 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளது மான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு அக்சஸ் ஹயிட்ரோ பவர் (பிரைவேட்) லிமிட்டட் எனும் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

காணித்துண்டு A (0.0333 ஹெக்டயர்)

வடக்கு : காணித்துண்டு A;
கிழக்கு : காணித்துண்டு 146 (R/P), 116 A (R/P) மற்றும் இதில் 13;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 117 மற்றும் 146 (R/P);
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 146 (R/P).

காணித்துண்டு B (0.0050 ஹெக்டயர் )

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 116A (R/P);
கிழக்கு : முருதன் கால்வாய் ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 116A (R/P) மற்றும் 146 (R/P);
மேற்கு : இதில் B மற்றும் 146 (R/P).

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை

கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2018.08.09 தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை.**- 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4 % வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும் ;

இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்;

**தவணைப்பணம்.**- அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2018.06.20 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, நவெம்பர் 16.

11-762

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/34773.
மாகாண காணி ஆணையாளரின்
இல. : எல்சி/எல் 2/3031668.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இரத்தினபுரி மாவட்டம், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெஹெனகந்த 164 F கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பஹலகம கிராமத்தில் அமைந்துள்ளதும் R/RTN/2014/ 355/ LS ஆம் இலக்க சுட்வடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கங்கள் B, C,D, E, F, J, M மற்றும் N எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.4132 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளது மான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு எகோ பிரன்ட்லி பவர் டெவலப்பர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் எனும் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப் படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

காணித்துண்டு B (0.0374 ஹெக்டயர் )

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 98 $^{1/2}$, $64^{A}$ மற்றும் காணித்தொகுதி A;
கிழக்கு : காணித்தொகுதி A மற்றும் $64^{A}$, 98 $^{1/2}$;

தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 98 1/2 மற்றும் 98 2/2 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் D,C காணித்துண்டு இலக்கங்கள் 93 மற்றும் 98 1/2.

காணித்துண்டு C (ஹெக்டயர் 0.0008)

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 93 மற்றும் 98 1/2;
கிழக்கு : காணித்தொகுதி B ;
தெற்கு : காணித்தொகுதி D ;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 98 2/2 மற்றும் 93.

காணித்துண்டு D (0.0297 ஹெக்டயர்)

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 98 2/2, மற்றும் காணித்துண்டு அட்சரம் C ;
கிழக்கு : காணித்தொகுதி B, காணித்துண்டு இலக்கங்கள் 98 1/2 மற்றும் 98 2/2 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 98 2/2, 99 மற்றும் காணித்தொகுதி E ;
மேற்கு : காணித்தொகுதி E காணித்துண்டு இலக்கங்கள் 99 மற்றும் 98 2/2.

காணித்துண்டு E (0.0535 ஹெக்டயர் )

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 99, 98 2/2, மற்றும் காணித்தொகுதி D ;
கிழக்கு : காணித்தொகுதி D, காணித்துண்டு இலக்கங்கள் 98 2/2 மற்றும் 99 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 99, 64A மற்றும் காணித்தொகுதி G மற்றும் F ;
மேற்கு : காணித்தொகுதி F காணித்துண்டு இலக்கங்கள் 103 மற்றும் 99.

காணித்துண்டு F (0.0004 ஹெக்டயர்)

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 103;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 99 மற்றும் காணித்தொகுதி E;
தெற்கு : காணித்தொகுதி G ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 103.

காணித்துண்டு J (0.0020 ஹெக்டயர்)

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 105 2/2, மற்றும் 66 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 66 மற்றும் காணித் தொகுதி K;
தெற்கு : காணித்தொகுதி K மற்றும் காணித்துண்டு இலக்கம் 83 F ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 105 2/2.

காணித்துண்டு M (0.0471 ஹெக்டயர்)

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 111, 83F மற்றும் காணித்தொகுதி K ;
கிழக்கு : காணித்தொகுதி K;
தெற்கு : காணித்தொகுதி N மற்றும் காணித்துண்டு இலக்கம் 120 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 111.

காணித்துண்டு N (0.2423 ஹெக்டயர்)

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 120, 111, காணித் தொகுதி M மற்றும் K ;
கிழக்கு : காணித்தொகுதி K;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 83 F , 121, 122 மற்றும் 120;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 120, 123.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணிகளை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2018.06.20 தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை**.- 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4 % வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும் ;

இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்;

**தவணைப்பணம்**.- அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியி லிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2018.06.20 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, நவெம்பர் 16.

11-763

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.